


இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 260 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – சித்திரை 17 – புதன்கிழமை 30 ஏப்ரல் 2025 – வெளியீடு 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 260 : Thiruvalluvar Year - 2056 - Chithirai 17 - Wednesday 30 April 2025 - Dak 16 Pages ₹ 5.00


## அடமானம் வைக்க நினைப்பவர்களாலும் – அபகரிக்க நினைப்பவர்களாலும்
## தமிழ்நாட்டை ஒருபோதும் சூறையாட முடியாது!

# 2026-லும் 2.0 திராவிட மாடல் ஆட்சியே!

## பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கைக்கான பதிலுரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஏப். 30 -**

**“அடமானம் வைக்க நினைப்பவர்களாலும் - அபகரிக்க நினைப்பவர்களாலும் தமிழ்நாட்டை ஒருபோதும் சூறையாட முடியாது. 2026-லும் 2.0 திராவிட மாடல் ஆட்சியே!” என்று பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கைக் கான பதிலுரையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உறுதிபட தெரி வித்தார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.4.2025) சட்டமன்றப் பேரவையில், 2025–2026 ஆம் ஆண்டிற்கான காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு பதிலளித்து உரையாற்றினார்.

இந்த ஆண்டு உள்துறை சார்பில் 102 அறிவிப்புகள் வெளியிடப்படுகிறது. காலத்தின் அருமை கருதி சிலவற்றை இப்போது நான் அறிவிக்க விரும்புகிறேன். மீதமுள்ள அறிவிப்புகளை நான் படித்ததாக கருதி அவை குறிப்பில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். (அறிவிப்புகள் இணைக்கப்பட்டுள்ளது)

கடந்த மார்ச் 14ஆம் நாள் இந்தக் கூட்டத்தொடர் தொடங்கியது. நான் மட்டுமல்ல, பெரும்பாலான அமைச்சர் பெருமக்களும் - உறுப்பினர்களில் பலரும் எல்லா நாளும் அவைக்கு வந்திருக்கிறார்கள். விவாதங்களில் பங்கெடுத்து பதிலளித்திருக்கிறோம்.

கேள்வி நேரம் கவன ஈர்ப்புத் தீர்மானம் மானியக் கோரிக்கை விவாதம் - பதிலுரை என்று மிகச் சிறப்பாக தங்களின் கடமையை ஆற்றியிருக்கிறார்கள்!

ஜனநாயகப் பண்போடு இந்த அவையை நடத்த துணை நின்ற அத்தனைப் பேருக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றி!

இந்த ஜனநாயகப் பண்பு எல்லா நாளும் தொடரவேண்டும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

நூற்றாண்டுப் பாரம்பரியம் கொண்ட தமிழ்நாடு சட்டமன்றத்தின் மாண்பைக் காப்பதுதான் நம்முடைய அனைவரின் நமது முதல் கடமை!

அந்தக் கடமையில் எந்த இடத்திலும் தவறிவிடக் கூடாது என்பதில் நான் மிகக் கவனமாக இருக்கிறேன்.

என்னை பொறுத்தவரைக்கும் வாக்களித்த மக்களுக்கு உண்மையாக இருக்க வேண்டும் என்பதில் மிக கவனமாக இருக்கிறேன்.

## சாதனைகளை படைப்போம்!
## தமிழ்நாடு வரலாறு படைக்கும்!

**10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியைவிட ஆயிரம் மடங்கு சிறப்பான சாதனைகளை செய்திருக்கிறோம்!**

அதனால்தான், கடந்த நான்காண்டுகளில், தலைமுறைகளைக் கடந்தும் பயனளிக்கக்கூடிய ஏராளமான திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறோம். இந்த திட்டங்கள் எல்லாம் ஸ்டாலின் பெயரை அல்ல, திராவிட மாடல் அரசின் பெயரை சொல்லும்.

கலைஞர் உரிமைத்திட்டம் - விடியல் பயணம் - முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் - புதுமைப்பெண் - தமிழ்ப்புதல்வன் - நான் முதல்வன் இல்லம் தேடிக் கல்வி -மக்களைத் தேடி மருத்துவம் - இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 - முதல்வர் மருந்தகம் கலைஞர் கனவு இல்லம் - ஊட்டச்சத்தை உறுதி செய் - தோழி விடுதி - அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் - உள்ளிட்ட ஏராளமான திட்டங்களை நம்முடைய அரசு செயல்படுத்திய தெம்போடு உறுதியாக சொல்கிறேன்...

கடந்த பத்தாண்டுகால அ.தி.மு.க. ஆட்சியை விட ஆயிரம் மடங்கு சிறப்பான சாதனைகளை அனைத்துத் துறைகளிலும் செய்திருக்கிறோம்.

இந்த உறுதியோடும் - மக்கள் மேல் உள்ள நம்பிக்கையோடும் சொல்கிறேன்...

அடமானம் வைக்க நினைப்பவர்களாலும் - அபகரிக்க நினைப்பவர்களாலும் தமிழ்நாட்டை ஒருபோதும் சூறையாட முடியாது!

எங்களை எல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றே சொன்னார், தமிழகம் உலகின் ஒரு பகுதியாக இருக்கலாம், ஆனால் அது யாருடைய வேட்டைகாடாகவும் இருந்திட ஒருநாளும் ஒப்புக் கொள்ள மாட்டோம். சுயாட்சி என்பது எங்கள் பிறப்புரிமை. அதனை தடுக்கவோ, தகர்க்கவோ எவருக்கும் உரிமையில்லை. இது எங்கள் போர் முழக்கம் என்று பேரறிஞர் அண்ணா முழங்கினார். அவரது கனவை நிறைவேற்றும் வகையில் சட்டமன்றத்தில் இறையாண்மையை நிலைநாட்டும் வகையில் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை பெற்றோம். அடுத்தப்படியாக மாநில சுயாட்சி கனவையும் நிறைவேற்ற குழு அமைத்திருக்கிறோம்.

நான் தொடங்கியுள்ள இந்த பயணம் நீண்டது. முதலமைச்சராக ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிற இந்த வேளையில், இந்த மன்றத்தில் நின்று உறுதியோடு சொல்கிறேன், என் பயணம் தொடரும். தமிழ்நாட்டிற்காக, தமிழர்களுக்காக, மாநில உரிமைகளுக்காக என் பயணம் தொடரும்.

## தமிழ்நாட்டிற்காக - தமிழர்களுக்காக என் பயணம் தொடரும்!

**நான் தொடங்கியுள்ள இந்த பயணம் நீண்டது. முதலமைச்சராக ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிற இந்த வேளையில், இந்த மன்றத்தில் நின்று உறுதியோடு சொல்கிறேன், என் பயணம் தொடரும். தமிழ்நாட்டிற்காக, தமிழர்களுக்காக, மாநில உரிமைகளுக்காக என் பயணம் தொடரும்.**

**இதுவரை பார்த்தது திராவிட மாடல் அரசின் Part 1 தான். 2026ல் Version 2.0 Loading அதில் இன்னும் சாதனைகளை படைப்போம். தமிழ்நாடு வரலாறு படைக்கும். வாழ்க தமிழ், வெல்க தமிழ்நாடு.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### இனி ஆண்டுதோறும்
## செப். 6 - காவலர் நாளாகக் கொண்டாடப்படும்!

பொதுமக்களுக்கும் காவல்துறைக்கும் இடையே உள்ள இந்த நல்லுறவை மேலும் வலுப்படுத்திட என் நெஞ்சில் நீண்ட காலமாக இருந்து வரும் எண்ணத்தை, உணர்வை செயல் வடிவம் கொடுக்க நான் விரும்புகிறேன். சட்டம் ஒழுங்கை காப்பற்றி இரவு பகலும் கண் துஞ்சாது காவல் பணியில் ஈடுபட்டு, பொது அமைதியை பாதுகாக்கும் காவலர்களுக்கென தனி நாளை கொண்டாடுவதற்காக, காவலர்களின் சேவையை போற்றி பாராட்டிட முதன் முதலாக 1859ல் மெட்ராஸ் மாவட்ட காவல் சட்டத்தை நிறைவேற்றி நவீன மற்றும் அமைப்பு ரீதியான காவல்துறை தோற்றுவிக்கப்பட்ட செப்டம்பர் 6ஆம் நாள் இனி ஆண்டுதோறும் காவலர் நாளாக கொண்டாடப்படும்.

இந்நாளில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றை கடைபிடித்து சிறப்பாக பணியாற்றிய காவலர்களுக்கு பதக்கங்கள் வழங்கப்படும். ஒவ்வொரு மாவட்ட காவல்துறையின் சிறப்புகளை சொல்லக்கூடிய வகையில் அனைத்து மாவட்டங்களிலும் காவல் துறை சார்பில் கண்காட்சிகள் நடத்துதல், குருதிக்கொடை முகாம்கள் நடத்துதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் அன்று நடைபெறும் என்பதை நாங்கள் தெரிவித்துக் கொள்கிறேன்.

**- முதல்வர் மு.க.ஸ்டாலின்**
சட்டப்பேரவையில்
29.04.2025

## “காலனி” எனும் சொல் நீக்கப்படும்!

இன்னொரு முக்கிய அறிவிப்பை வெளியிட விரும்புகிறேன். இந்த மண்ணின் ஆதி குடிகளை இழிப்படுத்தும் அடையாளமாக “காலனி” என்ற சொல் பதிவாகியிருக்கிறது.

ஆதிக்கத்தின் அடையாளமாகவும், தீண்டாமைக்கான குறியீடாகவும் வசை சொல்லாக மாறியிருப்பதால் இனி இந்த சொல் அரசு ஆவணங்களில் இருந்தும், பொது புழக்கத்திலிருந்தும் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**- முதல்வர் மு.க.ஸ்டாலின்**
சட்டப்பேரவையில்
29.04.2025